உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாவையந்தாதி.

இது

யாழ்ப்பாணம், தெல்லியம்பதி

திரு. பூ. பொன்னம்பலம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

அவர் மருகர்

அ. சின்னத்தம்பி அவர்களால்

கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

[இரண்டாம்பதிப்பு.]

பதிப்புரிமை பதிவு செய்யப்பெற்றது.

இதன் விலை] 1940 [சதம் 10

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாவையந்தாதி.

இது

யாழ்ப்பாணம், தெல்லியம்பதி

திரு. பூ. பொன்னம்பலபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

அவர் மருகர்

அ. சின்னத்தம்பி அவர்களால்

கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பெற்றது.

[இரண்டாம்பதிப்பு.]

பதிப்புரிமை பதிவு செய்யப்பெற்றது.

இதன் விலை] 1940 [சதம் 10

# முகவுரை.

இம்மாவையந்தாதியின் ஆக்கியோனும், செவ்விய தமிழ்ப் புலமை கைவந்த பாவலரும், தெல்லியம்பதியைப் பிறப்பிடமாகவுடையாரும், சென்னையில் ஆசிரியராயிருந்தவரும், சிவநேயச் செல்வருமாகிய திரு. பூதப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள், எனது தாயாரோடு உடன்பிறந்தாராவர்.

இவர் மணஞ்செய்யாமலே, தனது நாற்பத்தைந்தாவது வயதிற் சென்னையிற் காலகதியடைந்தனர். இவ்வந்தாதி இற்றைக்கு ஐம்பத்தோராண்டுகளின் முன், சென்னபட்டணம், சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையில் இவரால் வெளியிடப்பெற்றது.

இந்நூல் மறைந்தொழிந்துபோகாது பாதுகாத்தற் பொருட்டும், இவரது பெயரை நிலைநிறுத்தற்பொருட்டும் யானிதனை இதுபொழுது அச்சிட முன்வந்துள்ளேனென்பதைத் தமிழன்பராயினோர்க்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதற்குச் சிறந்ததோருரை யெழுதியுதவுவார்க்கு, என்னாலியன்றவரை பரிசளிப்பே னென்பதையும் அன்போடறியத்தருகின்றேன்.

இங்ஙனம்,

அ. சின்னத்தம்பி.

**Lanka British Hat Mart,**
*101, 103, Norris Road,*
*COLOMBO.*

சிவமயம்.

# மாவையந்தாதி.

## காப்பு.

உலகுபரவுபுகழிலங்காபுரத்துச்சியதா
யிலகுபொன்மாவைக்குகன்மேலந்தாதியிசைக்கமதி
நிலவியவேணியருண்மதயானையைநெஞ்சில்வைத்து
மலர்விருப்பாற்புனைந்தென்னாவிலென்றும்வழுத்துவனே.

---

திருமாதிருமாலருடொழின்ஞானந்திகழுருவத்
திருமாதிருமாசுதரேகலைகுருசேதனக்க
திருமாதிருமாணடியேயடைந்தசிறியனுளந்
திருமாதிருமாவையந்தாதிமுற்றச்சிகாவளரே. (௧)

காவணங்காவணங்கார்கொடிமேழியர்கற்பகப்பூங்
காவணங்காவணங்காற்றன்மறைமேயகமலைநெருக்
காவணங்காவணங்காட்டியமாவைக்கவிகுறையா
காவணங்காவணங்காந்தமறைத்துங்கதாரகமே. (௨)

தாரகந்தாரகந்தோய்நீரிற்றானவர்ச்சாய்த்திடுவி
தாரகந்தாரகந்தப்பொழின்மாவைத்தலையவனே
தாரகந்தாரகந்தைக்கடந்தீச்சினஞ்சாய்த்துணடைந்
தாரகந்தாரகந்தாழ்குகதாகழற்றாமரையே. (௩)

தாமரைதாமரைசந்தனச்சாரற்சயிலகற்பத்
தாமரைதாமரைசாளச்செய்மாவையசக்கிரியத்
தாமரைதாமரைசாணுயமால்விடைச்சந்த்ரமுடித்
தாமரைதாமரைநாண்மலர்காட்டுஞ்சரண்மூடியே. (௪)

சரணஞ்சரணஞ்சரவினின்றான்மயிறாங்கிடவஞ்
சரணஞ்சரணஞ்சரந்தொடுத்தாரருள்சத்தியிற்குஞ்
சரணஞ்சரணஞ்சரசூரனைத்தடிந்தாய்நினருட்
சரணஞ்சரணஞ்சரசெழுமாவையதந்தருளே. (௫)

தந்திர தந்திரடான்வர்நேருஞ்சமரில்விண்ணோர்
தந்திர தந்திரநாயகமாகித்தருவருக்குத்
தந்திர தந்திரயாம்பகசாமி தருகுமர
தந்திர தந்திரவாமாவையீரென்றன்பானணுக்கே. (௬)

பானலம்பானலம்பட்டிடனீக்கிப்படுத்ததுகோ
பானலம்பானலம்பாதியவாட்டிப்பணிதனைநம்
பானலம்பானலம்போருகர்கீற்றுக்கப்பாலுமளிப்
பானலம்பானலம்பாழிகொண்மாவைப்பரைமஞ்சனே. (௭)

மஞ்சரிமஞ்சரிமால்வரைமங்கைமணாளர்முக
மஞ்சரிமஞ்சரிதோலணியாளர்க்குமாமுடித்தா
மஞ்சரிமஞ்சரிமாகோதிர்வரைமாவையர்ந
மஞ்சரிமஞ்சரிநீபத்தர் தாண்முடிமாவணியே. (௮)

மாவரைமாவரைமாய்த்தெழுநீத்தமடித்தசய
மாவரைமாவரைமாணுணவாகுமலைகொடெய்வ
மாவரைமாவரைமாசுணத்தார்சுதர்மாவையர்க்கே
மாவரைமாவரைமாண்கவிபோற்றிவணங்குவனே. (௯)

வணங்குவணங்குவளையார்வளையினர்மார்பினர்பூ
வணங்குவணங்குதிரையார்மருகரெம்மாலசல
வணங்குவணங்குதிகழ்வாரெனுமுரைமாற்றல்செய்தி
வணங்குவணங்குபரிவானுளரெனமாவைசென்றே. (௰)

மாவையமாவையமுப்புரஞ்செற்றவர்மைந்ததரு
மாவையமாவையதாக்கிற்கடிகைவரைநிலைக்கு
மாவையமாவையமன்கொளவூண்ஞமலிநரிக்கா
மாவையமாவையவீதோநானென்றுவருந்தினனே. (௧௧)

வருந்தவருந்தவனஞ்சாய்நிழற்பொழின்மாவையிற்றே
வருந்தவருந்தவரூர்பணிசெய்திதிமைந்தர்கங்க
வருந்தவருந்தயிலம்பர்கழன்மலர்வண்டினற
வருந்தவருந்தகவுற்றகண்ணேகண்ணிவ்வானிலத்தே. (௧௨)

வானிலவானிலவும்பொழின்மாவையின்மாணருள்செய்
வானிலவானிலயம்புகுந்தேத்தல்செய்வாய்மலர்க்கோ
வானில்வானிலமால்குளிர்நீரெரிவன்னிசல
வானிலவானிலயப்பொருளாமவன்மன்னடியே. (௧௩)

மன்றனமன்றனதாழிறும்மேற்றவருவனசை
மன்றனமன்றனமேமனங்கொண்டமதியிலிர்கா
மன்றனமன்றனலாக்கினர்சேய்சுரமாமயில்பொன்
மன்றனமன்றனமாவையிற்போற்றுதிர்மந்திரமே. (௧௪)

மந்தரமந்தரவோடிசைந்தானெரிவாய்க்கவுச்ச
மந்தரமந்தரளப்பந்திசையார்மகிழ்ந்தெறிசு
மந்தரமந்தரமாவைவிழவுவணங்கினர்சா
மந்தரமந்தரகம்புகுதார்கடென்மாதிரமே. (௧௫)

மாதிரமாதிரடானவர்தேரணிவந்தெதிர்சூர்
மாதிரமாதிரமாய்த்தவன்றீர்த்திகைவாரிவல
மாதிரமாதிரவாடுறுமாவையெம்மான்முனம்விம்
மாதிரமாதியார்த்தமும்வீடுமுன்வந்திடுமே. (௧௬)

வந்தனைவந்தனையானனனீந்தமகாரதரி
வந்தனைவந்தனையர்க்ககவெம்பசிமாற்றவுள்ளு
வந்தனைவந்தனையான்மாவைவாழும்வரதனுரு
வந்தனைவந்தனைசெய்முடியும்பவவல்லியதே. (௧௭)

வல்லியம்வல்லியம்பாற்றூரத்தங்குறமாதிதழ்செவ்
வல்லியம்வல்லியம்பேர்முலைவள்ளிமணாளகுறை
வல்லியம்வல்லியம்பாட்டெழில்காட்டியமாவையகை
வல்லியம்வல்லியம்பெற்றிடச்செய்வேன்மலர்க்கரனே (௧௮)

காத்தங்காத்தங்கிளர்கணையோர்மங்கைகாதலர்சூ
காத்தங்காத்தங்கதமுடையார்தந்தகந்தாஞ்சா
காத்தங்காத்தங்கெழுமாவையீசர்கதிர்மணிச்சே
காத்தங்காத்தங்கொடுத்தாரிலநரகங்கணமே. (௧௯)

கங்கணகங்கணவென்றிரைமாவைக்கடல்குடைந்தா
கங்கணகங்கணமாமுடிப்பூணரைக்கச்சுப்பன்ன
கங்கணகங்கணகாலாரிசேய்கழல்காணுமுங்கட்
கங்கணகங்கணநீத்தெய்துமேலுலகத்தின்பமே. (௨0)

கத்தினகத்தினவாயுழனீக்கிக்கழற்கொகன
கத்தினகத்தினநில்லாதருடிகறையுணவா
கத்தினகத்தினலீவிலங்காரங்கணிசுனைநா
கத்தினகத்தினமாமாவையாசுரர்காவலனே (௨௧)

காவிலங்காவிலங்கான்மரமார்வரைகாவலவே
காவிலங்காவிலங்கற்சிரநீரிற்கடலின்முழங்
காவிலங்காவிலங்சோதோட்டுமாவையகாலன்முன்னே
காவிலங்காவிலங்கிட்டாதொழிகழற்கஞ்சத்தினே. (௨௨)

கஞ்சனங்கஞ்சனங்கட்குளூற்றட்டவன்காதன்மரு
கஞ்சனங்கஞ்சனங்கொண்டோன்றிருவடிகாணமயக்
கஞ்சனங்கஞ்சனங்கொள்ளாதொழித்தவன்காதலன்காற்
கஞ்சனங்கஞ்சனங்கொண்மாடமாவைநங்காமரனே. (௨௩)

காமரங்காமரங்கூரயிற்கண்ணார்கனியெழில்வாய்க்
காமரங்காமரங்கந்திகழ்மாவையகார்வடவா
காமரங்காமரங்கேசர்மருகநின்கான்மலரே
காமரங்காமரங்கந்தகித்தார்சுதகாமகிழ்ந்தே. (௨௪)

காமலைகாமலையந்திகழ்மாவையகன்னலொடே
காமலைகாமலையன்புரகூதனன்கண்ணுதல்பா
காமலைகாமலைவந்தோய்நின்னருள்வணங்காவுடல்புக்
காமலைகாமலையாதியதுன்பங்கரக்கவந்தே. (௨௫)

கவந்தங்கவந்தங்கொடுத்தான்மருககடைப்பொழுதே
கவந்தங்கவந்தங்கடிநடஞ்சோரிகறங்கிசையா
கவந்தங்கவந்தங்களுன்முடிச்சூர்ச்செற்றகையெஃகிலங்
கவந்தங்கவந்தங்கிடர்தீரநன்குசணித்தருளே. (௨௬)

தருக்கந்தருக்கந்தகாரத்தினுற்றினஞ்சாய்மடவா
தருக்கந்தருக்கந்தரித்தார்சடிலந்தனில்வளரிந்
தருக்கந்தருக்கந்தநன்மலரார்சுதர்சாருருச்சித்
தருக்கந்தருக்கந்தலமெழின்மாவையந்தானமதே. (உஎ)

தானசந்தானசந்தெய்துந்தருமணிதாமரைநந்
தானசந்தானசந்தாமுளவாயினுந்தாபதரேத்
தானசந்தானசந்தப்பரியாக்கொண்டசத்திகரத்
தானசந்தானசந்தில்லாருக்கட்டதரித்திரமே. (உஅ)

திரவத்திரவத்தபூணுணிலைபூச்செயுள்விரைசந்
திரவத்திரவத்தயலாஞ்சுகப்பெயர்செப்பிடுமு
திரவத்திரவத்திவாவறியாதகுருட்டையுருத்
திரவத்திரவத்திசங்கமமாவையதீரத்தனே. (உகூ)

தீரத்தந்தீரத்தந்தாவளமாமுகன்சிந்திடச்செய்
தீரத்தந்தீரத்தந்துன்போத்துவானவர்சிந்தைதவிபத்
தீரத்தந்தீரத்தந்தேமாவையீரெனச்சிந்தையுறத்
தீரத்தந்தீரத்தந்தத்துற்றநீப்பன்றென்றிக்கினலே. (௩0)

திக்கையத்திக்கையத்தார்மாவையாதிபசேரிருட்டந்
திக்கையத்திக்கையத்தங்கொண்டவற்கொல்லிசேயவது
திக்கையத்திக்கையத்தாதீரவந்தருதீப்பவக்கொ
திக்கையத்திக்கையத்தாதிநாகதிமவட்டமே. (௩க)

வட்டகவட்டகமார்மாவையவருள்வாரிசெல்கு
வட்டகவட்டகமாவேரச்சுவள்ளிமணாளவுரு
வட்டகவட்டகசச்சூரவாரிதிமாவினைய
வட்டகவட்டகநீக்கிக்கொண்மாமயில்வாகனனே. (௩உ)

கனகங்கனகங்கைமேல்வரைகாவலன்கைத்தெனமிக்
கனகங்கனகங்கைகொண்டவர்கூறக்கடவுளர்பு
கனகங்கனகங்கணக்கைச்செண்டிற்செற்றசேய்கழற்கோ
கனகங்கனகங்குலென்மாவைத்தாழ்தியகந்தருக்கே. (௫௩)

கந்தவகந்தவநீள்பொழின்மாவைக்கடலினன்றி
கந்தவகந்தவருகவுற்றுடிக்கடிமணமு
கந்தவகந்தவமேமறவாதுறைகன்னியருக்
கந்தவகந்தவனுயுறல்பார்த்தணிகைதலைக்கே. (௫௪)

தலைவிதலைவிசனத்திறந்தோர்பினுஞ்சார்ந்தனர்ம
தலைவிதலைவிகசிதானனமகிழ்தந்துபிணி
தலைவிதலைவிபவமினநேசச்சழக்கிலுறத்
தலைவிதலைவிதனமினுமாவைதொழாதவர்க்கே. (௫௫)

தவங்கதவங்கமரனடிகாட்டுஞ்சலதியிலா
தவங்கதவங்களிறல்பார்க்குமாவையன்சால்குடமா
தவங்கதவங்கனயன்மாலிடையிருள்சார்தினமெய்
தவங்கதவங்களடநோக்கிவாங்கறஞ்சக்கரமே. (௫௬)

சக்கரஞ்சக்கரஞ்செய்படைசூன்றணிந்தார்க்கருள்விஞ்
சக்கரஞ்சக்கரஞ்சொல்வார்தமன்பர்தனையவெம்ம
சக்கரஞ்சக்கரஞ்சால்கூற்றுறுமுனர்த்தாவருட்டஞ்
சக்கரஞ்சக்கரஞ்சாராதிருவினைசார்பவத்தே. (௫௭)

அக்கர சுதகம்

பவநம்பவநம்பகன்றுரவளர்ப்பரனருள்வி
பவநம்பவநம்பனம்பிகைசேயருள்பண்பதுசோ
பவநம்பவநம்பாற்காருஞ்செய்தலெப்பாலினுநீ
பவநம்பவநம்வநங்கமம்மாவையிற்பஞ்சகமே. (௫௮)

பஞ்சரபஞ்சரணென் றழைப்பார்யமபாசர்கைவெம்
பஞ்சரபஞ்சரணேலரியாம்பகல்பற்றென்மது
பஞ்சரபஞ்சரமார்பொழின்மாவைப்பதியகடப்
பஞ்சரபஞ்சரசாசைநீக்கென்றுபணிந்திலரே. (௩௯)

திலகந்திலகந்தவர்தொழுமாவையன்சீரலைச்செந்
திலகந்திலகந்தருநுதன்மாமுகற்செற்றெனுளத்
திலகந்திலகந்தொலைப்பானமர்ந்தவன்சீரடிதாழ்ந்
திலகந்திலகந்துகிரெருலைப்பேயலதென்செயுமே. (௪௰)

தென்றலைதென்றலையார்மாவையிலெற்றெறுதல்புரிந்
தென்றலைதென்றலைவிட்டாரருள்வர்முன்சேர்வர்கருத்
தென்றலைதென்றலையன்னதுன்பாறல்சிகிமிசையிந்
தென்றலைதென்றலைநோக்கின்றிப்போயநஞ்சிந்தையரே (௪௧)

சிந்துரசிந்துரநேர்பலகூறுவர்தீநெறிந
சிந்துரசிந்துரவாரனைமாவையனையிமங்க
சிந்துரசிந்துராளுற்பொழில்வெற்பனைச்செஞ்சடைநோய்
சிந்துரசிந்துரகத்தார்சுதற்பணிசேதனத்தே. (௪௨)

சேதகஞ்சேதகஞ்சந்திகழ்மாவையதீயவுணஞ்
சேதகஞ்சேதகஞ்செய்வேலராவணற்செற்றதுரி
சேதகஞ்சேதகஞ்சாய்த்தோன்மருகதித்தித்திடுநஞ்
சேதகஞ்சேதகஞ்சாராதருணன்றிற்செல்லுகைக்கே. (௪௩)

கைக்கிளைகைக்கிளையாழ்நீக்கிக்கஞ்சக்கழலுறுத
கைக்கிளைகைக்கிளையார்சாரன்மாவைக்கடவுளுண்ண
கைக்கிளைகைக்கிளையோன்பொருள்பேசிக்கனையிருளுற்
கைக்கிளைகைக்கிளைமுத்தொளிர்காலையிற்காத்தனனே (௪௪)

கார்த்திகைகார்த்திகையார்குமிடோன்றிகவினநிலக்
கார்த்திகைகார்த்திகைநீர்விழவோங்குங்கடல்குடைந்துங்
கார்த்திகைகார்த்திகைமீனலவன்சுடர்க்காடுதிருக்
கார்த்திகைகார்த்திகைமாவையற்காண்மூத்திகண்டனேயே.

கண்டனகண்டனமார்கடன்மாவையைக்காவிசையங்
கண்டனகண்டனமென்மொழிமாப்புனங்காவல்வள்ளி
கண்டனகண்டனகந்தொலைத்தானைக்கடப்பமலர்க்
கண்டனகண்டனமையனைக்காண்டிமோக்கந்தருமே. (சசு)

கந்தரங்கந்தரங்கந்தரங்கந்தரங்காயொலிரே
கந்தரங்கந்தரங்கந்தரங்கந்தரங்காட்டுமாவைக்
கந்தரங்கந்தரங்கந்தரங்கந்தரங்காண்கிலக்கீ
கந்தரங்கந்தரங்கந்தரங்கந்தரங்காட்டுவரே. (சஎ)

காடியங்காடியங்கஞ்சூடிமைந்தனிகாயமிலங்
காடியங்காடியங்காட்டியமாவைக்கடலின்முழுக்
காடியங்காடியங்கைதொழுதேத்திக்கழிக்குதிர்சாக்
காடியங்காடியங்கச்செலுங்கூற்றுவன்கம்பலையே. (சஅ)

கம்பலகம்பலரூர்மாவைவாசர்கருத்தினுருக்
கம்பலகம்பலனுதிதரவுண்டுகாவல்செயிக்
கம்பலகம்பலமாடிதன்மைந்தரிற்காமமயக்
கம்பலகம்பலனுக்குந்திறங்கண்டுங்கைக்கலையே. (சகூ)

கைக்கவிகைக்கவிபார்தாங்குபாண்டிக்கரையொடிலங்
கைக்கவிகைக்கவிதாசரிற்செல்லக்கடனெடுத்தோ
கைக்கவிகைக்கவிஞானைசெய்தவன்காதன்மரு
கைக்கவிகைக்கவியாற்புகழ்மாவையன்கைச்சத்தியே. (ருய)

சத்தியஞ்சத்தியஞ்ஞானத்தினால்விரசாசைசுகஞ்
சத்தியஞ்சத்தியஞ்சாற்றெழின்மாவையைச்சார்ந்திடுமோ
சத்தியஞ்சத்தியஞ்சாத்தினர்சேய்மலர்த்தாள்பணியாய்
சத்தியஞ்சத்தியஞ்ஞான்றிடுஞானந்தயங்குருவே. (௫௧)

குருத்தங்குருத்தங்கழல்புனைந்தார்சொற்குரவர்நல்வெங்
குருத்தங்குருத்தங்குணவமிர்தம்மைகொடுத்தமறைக்
குருத்தங்குருத்தங்குருமணத்தார்சொற்றகோமகன்சிக்
குருத்தங்குருத்தங்கிமண்செய்செயுமாவைக்கோகத்தனே.

கோகனகோகனகற்கனலாற்புரங்கொன்றபெம்மான்
கோகனகோகனகச்சடையான்றன்குமரனுலாக்
கோகனகோகனகந்தொலைத்தான்மாவைக்கோட்டமருங்
கோகனகோகனகப்பூவும்பொன்னிற்கொளுஞ்சந்தமே. (௫௩)

சந்திரசந்திரளன்றாதிமாமலர்தாம்புலங்க
சந்திரசந்திரணஞ்செய்மதனம்பிற்சார்ந்துளத்தச்
சந்திரசந்திரமார்மாவையாதிபதண்மைகுன்றாச்
சந்திரசந்திரவுற்றார்தவிர்த்திதமப்பவமே. (௫௪)

தமரத்தமரத்தமரத்தமரத்தகுவனடத்
தமரத்தமரத்தமரத்தமரத்தயலர்பிர
தமரத்தமரத்தமரத்தமரத்தலைவரெற்குத்
தமரத்தமரத்தமரத்தமரத்தமாவையரே. (௫௫)

வையகவையகசேந்திரன்பாவைமணாளவுக
வையகவையகலாபிகள்பூவைகள்வன்னிகள்கு
வையகவையகமால்குளிர்காரணிவான்பொழின்மா
வையகவையகநின்கட்பிணித்திமலங்கெடவே. (௫௬)

மலங்கமலங்கநிறைகடல்பார்த்திமனமயலா
மலங்கமலங்கலிழிசுனைகாணிவ்வனநின்றுவிம்
மலங்கமலங்கலணிந்தார்வரைதெரிமாவையிற்பொம்
மலங்கமலங்களலர்கயநோக்குதிமாதரசே. (நெ)

மாதங்கமாதங்கவையத்தர்சூரைவணிகனௌிர்
மாதங்கமாதங்காத்தயிலாற்செற்றவானவர்விம்
மாதங்கமாதங்கமாற்றியசேயெல்லிவையத்தற
மாதங்கமாதங்கனென்றுதன்மாவையின்மாடறியே. (நஅ)

மாடகமாடகவார்மொழிப்பன்மலர்மாலைதொழு
மாடகமாடகவீமாவைநாதர்வரையரற்கா
மாடகமாடகமாவேங்கைபொன்சொரிவார்சுனைத்தா
மாடகமாடகலாவோரைமேவுமகத்துறையே. (நகூ)

மகத்துமகத்துமிகுதன்மமீதுமனங்கொழுமே
மகத்துமகத்துயருஞ்சிந்துமாவையன்வாரிசென்மா
மகத்துமகத்துவநோக்கிடப்போனபொன்மீண்டிடில்ய
மகத்துமகத்துமடங்குவதோபடிவார்வித்தமே. (சுய)

வித்துருவித்துருமோற்பலமாவையர்மேன்மருண்டா
வித்துருவித்துருவத்துயராட்கறுமோபலகு
வித்துருவித்துருவைக்கொலைசெய்தரிமின்னிசிநா
வித்துருவித்துருவப்பாம்வெறியின்மிகுமையலே. (சுக)

மையனம்மையனம்பாலாதிமாற்றவனமலர்க்கா
மையனம்மையனம்புங்குறிமாண்டென்றுவன்றுயர
மையனம்மையனம்பாய்வயன்மாவைவளநகரம்
மையனம்மையனம்போருகத்தாட்குச்சிவைகரமே. (சுஉ)

வைகறைவைகறையங்கிரியாற்குறமாதனைத்து
வைகறைவைகறையார்வேலர்புட்கணமாத்துயிலேல்
வைகறைவைகறைமுன்றிரிமாவையர்மால்பிடித்தாய்
வைகறைவைகறைமேற்பகாலாவுறுமானிசமே. (சுங)

மானியமானியமிக்கத்தனையைநன்மாவையில்விண்
மானியமானியமஞ்செய்துமற்றிமறமுகப்பாய்
மானியமானியலாராடச்செய்தினமாதிபின்று
மானியமானியமார்விழவேத்துமெம்மைக்குநன்றே. (சுச)

மைக்கணமைக்கணவேர்த்தோண்மடமயிலேமருளா
மைக்கணமைக்கணயப்புறத்தந்தவர்மாவைவரு
மைக்கணமைக்கணணைபூங்குழல்கண்டுமான்றனவி
மைக்கணமைக்கணவுச்சிகிழ்வீழ்வனவாரணமே. (சுரு)

வாரணம்வாரணம்பாற்பகைசாய்த்தவர்மாவையுறை
வாரணம்வாரணம்பங்குடையார்தமைமார்கழித்தெய்
வாரணம்வாரணம்பாலெங்குமார்கவிர்மானுமுடி
வாரணம்வாரணம்பாடேல்வையேத்திடின்மாலறுமே. (சுசு)

மாலையமாலையணிறழலாடிசேய்மாவைமரு
மாலையமாலையகத்தளித்தாய்தென்வளியொடன்றின்
மாலையமாலையனுழிகுயில்வெண்மதிவருத்து
மாலையமாலையதீர்ந்திடின்மாறுமனச்சலமே. (சுஎ)

சலசஞ்சலசஞ்சரிகஞ்சொன்மாவைத்தரங்கத்துமா
சலசஞ்சலசஞ்சரப்பரியாக்கொடலைவவந்தா
சலசஞ்சலசஞ்சிதைத்தருள்வாயெனத்தாளிணைக்கி
சலசஞ்சலசஞ்சிதமறநோக்கிச்சம்பணியே. (சுஅ)

சம்பகஞ்சம்பகஞ்சார்சோலைகீலஞ்சலத்துறழ்பா
சம்பகஞ்சம்பகஞ்சாறடமாவைய தானவரஞ்
சம்பகஞ்சம்பகஞ்சாரயன்மான்மறைதாகனன்றுஞ்
சம்பகஞ்சம்பகஞ்சேர்த்தோயருள்வரசாகரனே. (௬௯)

சாகரஞ்சாகரஞ்சாந்திசெய்வார்பவஞ்சாய்த்தலினுற்
சாகரஞ்சாகரஞ்சாதநடேசர்சடைகளநி
சாகரஞ்சாகரஞ்சாத்தினர்சேய்குகசண்முகவி
சாகரஞ்சாகரஞ்சான்மாவைத்தாளம்புசாதரென்னே. (௭௦)

சாதனிசாதனியாமாலுகுமென்றலைபினம்பு
சாதனிசாதனிதார்க்குரைப்பேனன்பர்தம்முள்வன
சாதனிசாதனிலாமாவைநேசத்தலைவன்பாக
சாதனிசாதனிகத்தாற்கிலையித்தலைமண்டலே (௭௧)

மண்டவமண்டவனென்றிற்பல்வேறுசெய்வார்குணந்தே
மண்டவமண்டவனந்தெறச்சார்பல்சன்மத்தரின்னு
மண்டவமண்டவதைக்கொடியார்ப்பாவனைச்சொலட்டே
மண்டவமண்டவமார்மாவையன்காலரவிந்தமே. (௭௨)

விந்தரவிந்தரநாதஞ்சிவஞ்சத்திவிண்டுயர்கோ
விந்தரவிந்தரவார்சடையார்திரிவைடசிவ
விந்தரவிந்தரசாமாவையீரென்னவிச்சமற
விந்தரவிந்தரவிச்செற்றவர்க்கிட்டிர்மெய்வசமே. (௭௩)

வசந்தவசந்தமுறமுன்முனிக்குமறைசொல்குர
வசந்தவசந்தனுடலளித்தார்சுதமாமகத்தா
வசந்தவசந்ததனிகலமுற்றோயிறைவாசததி
வசந்தவசந்தமலரணிமாவையவாமவென்னே. (௭௪)

வாமத்தவாமத்தலோகதெய்வத்திர்நம்மாவையர்தே
வாமத்தவாமத்தயலரன்சேய்மகிழ்மாவெற்புரு
வாமத்தவாமத்தமரவுளதோவென்கைவாளியிற்போழ்
வாமத்தவாமத்தகக்கறைசோர்ந்திங்குவாவியதே. (௭௫)

ஞெடை பிணிப்பு

வாவியவாவியவாரலாரால்வளர்வாலவுரு
வாவியவாவியலாழியரியருள்வள்ளியுள்ள
வாவியவாவியவல்லவவாழவிவ்வூரருளால்
வாவியவாவியலோரவுரையருள்வாயவுள்ளே. (எசு)

வாசந்திவாசந்திசாந்தஞ்செல்சோலையில்வள்ளிதன
வாசந்திவாசந்தியைந்தபெம்மானங்கண்மாவையிறை
வாசந்திவாசந்திரோதயமாலைமலையமலை
வாசந்திவாசந்தியாஞதிமாற்றன்மனங்கணியே. (எஎ)

கணியார்கணியார்கலியரிபாடலர்கண்கண்மயக்
கணியார்கணியார்புகல்வபொத்தேங்குகன்மாவைகடைக்
கணியார்கணியார்கருத்தின்றமுற்றிற்றக்சாதினெருக்
கணியார்கணியார்வலர்யாமிவண்விலக்காந்தினமே (எஅ)

காந்தனங்காந்தனங்கொண்டழித்தான்குரக்கன்னியழ
காந்தனங்காந்தனங்கம்பிணித்தின்னயங்காட்டியசீர்க்
காந்தனங்காந்தனங்கொண்டொளிர்மாவைக்கடவுடார
காந்தனங்காந்தனங்கேட்பனவீவனங்கைத்தத்தமே. (எகூ)

தத்தமதத்தமகாமாவைக்கோவிறணிற்பணிக்காய்த்
தத்தமதத்தமபூந்தினர்க்கூடியஞ்சால்சடன்வே
தத்தமதத்தமரோசரினுண்டதுசார்கிலர்கைத்
தத்தமதத்தமரூஉமேனுமிங்கெனல்சங்கையதே. (அய)

வியபாருக பந்திப்பு

சங்கரசங்கரநாசன்மருமகன்றுசர்சலச்
சங்கரசங்கவின்றன்றுரைவரசாகரன்வா
சங்கரசங்கரங்காமாவைமாத்திரங்கந்துரைமா
சங்கரசங்கனன்னயச்சாகராத்தியங்கே. (அக)

தியங்கந்தியங்கந்தநமவென்றேருதுமுன்சேர்ந்திடுஞ்சத்
தியங்கந்தியங்கந்தருபொழில்சூழுஞ்சினகரமித்
தியங்கந்தியங்கந்தரமூரண்மாவையன்செஞ்சடையிந்
தியங்கந்தியங்கந்திருநீறணிந்தசிவநந்தனே. (அஉ)

நந்தனநந்தனயந்தோன்மருகனுமலிசெறி
நந்தனநந்தனமார்தடமாவையநாதசதா
நந்தனநந்தனரிப்பரிகூடனடாத்தியமர்
நந்தனநந்தனமேதருவாய்நயமாவதுவே. (௮௩)

மாவலிமாவலியாண்டறுமோவன்பர்மாமகிழி
மாவலிமாவலியாவுமின்றேநெஞ்சமாவலிக்கு
மாவலிமாவலிமாரதம்வந்தின்றமாவையனன்
மாவலிமாவலியாழ்த்தோன்மருகன்றன்மாதலத்தே. (௮௪)

மாதவமாதவனூறிடநோற்றசெம்மாசுணந்தேண்
மாதவமாதவவுண்பகற்கோளுடுவாய்த்தறவிம்
மாதவமாதவறின்னூர்க்கமூழ்கிமருவினமான்
மாதவமாதவனுண்மாவையான்முன்மயற்பங்கமே. (௮௫)

பங்கசபங்கசதானந்தமாமலர்ச்சாபகருப்
பங்கசபங்கசமம்புரிந்தார்சுதபண்ணவர்நம்
பங்கசபங்கசவீகாட்டுமொவையபாலநெருப்
பங்கசபங்கசவாதுளம்வாகிருபாகரனே. (௮௬)

பாகரன்பாகரன்சேய்மாவையின்மண்பொன்பங்குசன்னி
பாகரன்பாகரன்றன்றுவந்தேதகப்பணிந்தகிரு
பாகரன்பாகரன்றூர்தேரிவண்வரப்பண்ணல்வியப்
பாகரன்பாகரன்னம்புரைகம்புபணித்தனரே. (௮௭)

பணியம்பணியம்புலியன்புலியன்பரதமுடன்
பணியம்பணியம்பரர்க்களிப்போன்சுதன்பண்ணவர்நாப்
பணியம்பணியம்பகத்தோகைவாசிபரித்தவநட்
பணியம்பணியம்பொருமாவையின்மலர்ப்பாதத்தினே. ௮௮)

தத்திமிதத்திமிழின்னிசைகாட்டுஞ்சபையரமிழ்
தத்திமிதத்திமிலானுடையார்சுதர்தந்தனர்சீ
தத்திமிதத்திமிசைமீனுறைகடன்மாவைமதத்
தத்திமிதத்திமிசார்வரையாளர்தயாமிகவே. (௮௯)

யாமினியாமினிகேதனமானவயர்கின்னலுரை
யாமினியாமினியத்தரியார்திறற்கின்னல்புரி
யாமினியாமினிலத்துகுமான்மகிழ்வென்றுமொழி
யாமினியாமினியெல்லினுஞ்சீருறுமெம்மக்கமே. (௯௦)

மக்கடமக்கடலானமயல்செற்றவன்னிவெங்கா
மக்கடமக்கடமாறருமாறெங்கண்மாவையன்சே
மக்கடமக்கடலைப்பொடிபெண்செய்வரனையுரு
மக்கடமக்கடரன்பினின்றேத்தவரும்வித்தமே. (௯௧)

வித்தகவித்தகவாதியமித்தைவிடுத்தருண்மே
வித்தகவித்தகமாற்றவுற்றேனினைவீட்டலையேல்
வித்தகவித்தகராமாவையாதீனர்வெந்துயர்சாய்
வித்தகவித்தகரம்வெறிதன்னமிகைக்கம்பமே. (௯௨)

கம்பரங்கம்பரங்கொண்மாவைசெந்திகதிரைநல்லே
கம்பரங்கம்பரங்குன்றாவினன்குடிகாமரோ
கம்பரங்கம்பரங்காரார்வரைபிறகங்கொளெருக்
கம்பரங்கம்பரங்கூத்தாடிசேயிலக்காமங்களே. (௯௩)

காமருகாமருகற்பகமாவையகாந்தையலார்க்
காமருகாமருடற்களித்தார்சுதகண்ணபிரான்
காமருகாமருவாரிசபாதவெங்காலன்முன்னே
காமருகாமருளீதிமுன்னான்குகாத்தங்கனே. (௯௪)

தங்கம்பதங்கம்படங்கழுங்காட்டிடுந்தையலர
தங்கம்பதங்கப்படாசையிற்றாழ்தறவிர்த்துறநித்
தங்கம்பதங்கம்படேர்மாவையிற்குளிர்ச்சந்திரமா
தங்கம்பதங்கம்படோற்சவந்தாழ்தறகுபுத்தியே. (௯௫)

புத்திரிபுத்திரிபான்மயங்காதுபொருந்திவிருப்
புத்திரிபுத்திரிதோடமின்றேத்தணிபோரவுணர்
புத்திரிபுத்திரியச்செய்தமாவையன்பொன்னிமவெற்
புத்திரிபுத்திரிகச்சாம்தாளணிபூதியையே. (௯௬)

பூதியம்பூதியம்பந் தரம்பல்வகைபோமதிறும்
பூதியம்பூதியம்புந்தித்துன்பேகும்புரிவினையூண்
பூதியம்பூதியம்பாரத்தறுமனந்தப்பொருளார்ப்
பூதியம்பூதியம்பார்மாவைத்தாணும்புயாதரன்பே. (கள)

யாதனையாதனையாற்றேடவேண்டுமிதயத்தம்பு
யாதனையாதனைவாக்கினைதாளன்பியைந்துபணி
யாதனையாதனையாயருண்மாவையிறையவதுய்
யாதனையாதனையொப்பிலர்க்கென்றலெலாந்தருமே. (கஅ)

தருமந்தருமந்திருவறுநாளினிற்சாயுமிட்டத்
தருமந்தருமந்தமிக்கெழுநாளிற்றனையருமா
தருமந்தருமந்தொலைவென்றெண்ணுளினிற்சாய்குவர்ம
தருமந்தருமந்திபாய்மாவைச்சேய்பதமானந்தமே. (கக)

மானந்தமானந்தனந்தாமரைநன்மணியெழில்வி
மானந்தமானந்தமாரமராவதிமாவையினெம்
மானந்தமானந்தனையர்தந்நாப்பண்வதிதல்கண்டு
மானந்தமானந்தமாக்கடலாடிமகிழ்ந்திருமே. (க00)

---

## ஆக்கியோன் பெயர்.

அரசர்கை யால்இலங் கைநா யகமுத லிப்பெயர்கோத்
திரவுரித் தாற்பெற்றோர் தம்பியாந் தாமோ தரமுதலி
பிரபௌத் திரன்பூதப் பிள்ளை சுதன்தெல்லிப் பொன்னம்
பலகுக னுமம் புகன்மாவை யந்தாதி பாடினனே. [பலம்

(இச்செய்யுள் கூறினோர் யாழ்ப்பாணம்
சின்னத்தம்பிப்பிள்ளை.)

## இந்நூலாசிரியரியற்றிய பிறபாடல்கள்

### 1 மாலைமாற்று

ஈறுதொடங்கியும் வாசிக்க.

காலே கயநா விதவேத நாகுதய
பானு தனைமதமா வானையா—யானைவா
மாத மனைத னுபாய தகுநாத
வேத விநாயகனே கா.

### 2 கரந்துறைச் செய்யுள்.

ஏமநிதி மாவையா வேளணியா நம்மறதி
பாபவினை யாப்பே புரைகழலு—மாதகைய
நீபா தனுசவினப் பாப மதினயிலின்
கோவா கழிநாயே மை.

இதனுட் கரந்த செய்யுள் ஒவ்வொரெழுத்து விட்டுப் படிக்க


மாதிவை வேணிந மதிப னைப்புக
லுதய பானுவிப் பதியின் வாழியே.

### 3 நீரோட்டகம்.

தாயா யெனையளித்த சங்கரனற் றில்லையிறை
காயா நிறத்தனயன் காணுதான் — சேயான
கந்தனளி தந்தெனையாள் கத்தனயிற் கையனடி
சிந்தனைசெய் தின்னலினைத் தீர்.

### 4 இரட்டைநாகபந்தம்.

தேவச் சிலம்பனை மாவேலெனையனைத் தேன்வரைவண்
மாவைப் பதியனைச் சின்மய மங்கை தினையுற்றதேன்
பாகத் தவன்வரப் பாதத் தரும்வினை யாம்பகைசா
வேகுற் றவனைத் தவம்வரு மார்வத் தியம்புவனே.




**5 தேர் வெண்பா.**

*பொன்கொண்ட சீருலகம் போத மிலக்கச்செ*
*லின்போ தயபரிதிக் கிங்நிலம்மீ — தன்பொல்லை*
*தெத்தவிய னட்டமுற்றன் பார்க்களித்த பொற்பூத்தே*
*வைத்தபய மீயக் கடன்.*

உங்கள் இடங்களில் மங்களகரமாக
விளங்கத்தகுந்தது

# மெய்கண்டான்
## திருக்குறட் கலண்டர்

மிகவும் பிரயோசனமுள்ளது

# மெய்கண்டான்
## தமிழ் டயறி

கையடக்கமான அளவும் அழகும்
உறுதியுமுள்ளது

**மெய்கண்டான் பிறெஸ்,**
68, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.